## தவலம பிரதேச சபை
## காலி மாவட்டம்

---

# 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 22 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தவலம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 146,867 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்வதற்கு வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 288,855 தொகைக்கான நூலகப் புத்தகங்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சரியாக மூலதனப்படுத்த வேண்டும் | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 02 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப் பதிவேடுகளில் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 362,158 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் மீதி மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகைக் கணக்கு மீதி இடையே ரூபா 1,093,200 ற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | வருமான மற்றும் செலவுக் கணக்கில் சம்பளம் மற்றும் படிகள் ரூபா 12,066,553 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கில் அப்பெறுமதி ரூபா 11,319,746 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 746,807 தொகைக்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.3 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2013 ஆண்டு முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 16,477 தொகைக்கான தொங்கல் கணக்கின் வரவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல், அம்மீதியை நடைமுறைப் பொறுப்புக்களில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | சீராக்கல் மேற்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீண்ட காலமாக காணப்படும் சமமின்மை என்பதால் எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெறவேண்டிய கணக்கு** | | |
| ஒரு வருடத்தை விட மிகையான காலத்திற்குரிய ரூபா 5,214,764 தொகைக்கான பெறவேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீண்ட காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 2,283,876 தொகைக்கான செலுத்த வேண்டிய மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்படும் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 30,748,625 தொகைக்கான 08 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மான ங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 193 | பாதீட்டுடன் செலவு விடயங்களை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) விதி 218 | சபைக்குச் சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டடங்களை ஆண்டுக்கொரு முறை பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 102 இருந்து 110 வரை | 2019 ஜூன் 22 திகதி விபத்துக்குள்ளாகியிருந்த கப் வண்டி சேதமடைதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்து அதன் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | தெளிவின்மை காரணமாக விசாராணை அறிக்கையின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாமல் போனது. |
| (ii) நிதிப் பிரமாணங்கள் 1645 - 1646 | ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து வரும் 15 திகதிக்கு முன்னர் சபையினால் பயன்படுத்தப்படும் 08 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மறுறும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 09 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 85,783 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,287,871 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 415,856 | 551,322 | 498,181 | 357,590 | 415,856 | 587,746 | 582,276 | 304,449 |
| வாடகை | 4,977,000 | 2,327,710 | 2,301,085 | 141,300 | 4,977,000 | 1,762,890 | 1,725,675 | 114,675 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 536,425 | 383,571 | 383,571 | 8,800 | 536,425 | 537,679 | 537,679 | 8,800 |
| ஏனைய வருமானங்கள் | 2,562,500 | 2,220,613 | 1,008,860 | 6,595,594 | 3,519,300 | 3,197,523 | 1,961,521 | 5,383,841 |
| | 8,491,781 | 5,483,216 | 4,191,697 | 7,103,284 | 9,448,581 | 6,085,838 | 4,807,151 | 5,811,765 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,405,707 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,123,350 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பிரதான செயலாளரிடம் நிலுவை தொகையை பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பியுள்ளேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் ரூபா 1,459,808 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த குப்பை மீள்சுழற்சி நிலையத்திற்காக சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றிருக்காமை மற்றும் காணியின் உரிமை தொடர்பாக ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையின் மீது செயற்திட்டம் இடைநிறுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. மேலும், தனியான அலகு ஒன்று நிறுவப்பட்டு நீண்டகால வேலைத் திட்டமொன்றினை சபை முன்னெடுத்திருக்கவில்லை. | குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட வேண்டும். | குப்பை முகாமைத்துவத்திற்காக நீண்டகாலத் திட்டமொன்று எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்திக்கான நீண்ட காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| புதவியணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 09 வெற்றிடங்கள் மற்றும் மிகை ஊழியர் எண்ணிக்கை 03 ஆக காணப்பட்டது. | வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதவிகளை முறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ) ஊழியர் பிணை** | | |
| 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 180 பிரகாரம் பணம் அல்லது களஞ்சியத்திற்கு பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தரிடம் மற்றும் வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்களிடம் பிணைகள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணை வைப்பு பெற்றுக்கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் ஊழியர் பிணை வைப்பு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| புரநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 58,069,162 ற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் வாராந்த சந்தைக் கட்டடம் என்பன 2018 ஆண்டின் போது சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், காணிகளின் உரிமையை தீர்த்துக்கொள்ள முடியாமையினால் அப்பெறுமதியினை கணக்கீடு செய்ய முடியாதிருந்தது. | காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3.2 சொத்துக்களில் இருந்து பெறவேண்டிய வருமானத்தை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஓபாத வராந்த சந்தை மீளாய்வாண்டு ரூபா 901,000 தொகைக்காக டென்டர் மூலம் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அறவிடப்பட வேண்டிய கட்டணம் தொடர்பாக உடன்படிக்கையில் குறிப்பிடப்படாமையால் வாடகையாளர்களிடம் மிகையாக வாடகை அறவிடப்பட்ட காரணத்தினால் கடை உரிமையாளர்களின் எதிர்ப்பு காரணமாக 02 வாரங்களுக்குள் உடன்படிக்கையை இரத்துச்செய்ய நேரிட்டிருந்தது. | செல்லுபடியாகும் உடன்படிக்கையில் வாடகைத் தொகையை குறிப்பிட்டு அதனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3.3 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 45,577,614 தொகை பெறுமதியான 07 வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரித்தாக்கும் போது செலவிட நேரிடும் தொகைக்கான ஏற்பாடுகள் சபை நிதியத்தில் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று செயற்படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்பிக்க நடவடிக்கை எடுப்பேன். |